ரூபா விலை 1-00

# ஈழநாடு
THE EELANADU

மலர் 25 மார்கழி 20 ர-அவ் 19 இதழ் 327
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 4—1—83

# பிரபாகரன் - உமா கோஷ்டி பிளவினால் புதிய குழு?

## பொலிஸ் விசாரணையில் ஏற்பட்டுள்ள சந்தேகம்

[யாழ்ப்பாணம்]

பிரபாகரன் - உமாமகேஸ்வரன் கோஷ்டிகளுக்கிடையில ஏற்பட்ட பிளவைத் தொடர்ந்து புதிய இளைஞர் கோஷ்டியொன்று உருவாகியுள்ளதா என்ற சந்தேகம் பொலிசாருக்கு ஏற்பட்டுள்ளது.

பருத்தித்துறை ப. நோ. கூ. சங்க எரிபொருள் நிலையக் கொள்ளை தொடர்பாகவிசேட பொலிஸ் கோஷ்டி நடத்திய விசாரணையில் இது சம்பந்தமான தகவல்கள் கிடைத்துள்ளன.

பருத்தித்துறை ப. நோ. கூ. சங்க எரிபொருள் நிலையக் கொள்ளையின் போது 3 சந்தேக நபர்கள் கைதானதைத் தொடர்ந்து இச்சம்பவம்பற்றி விசாரணை செய்ய யாழ்

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில்

# பனம்பொருள் அபிவிருத்தி சர்வதேச மாநாடு!

## 15 நாட்டுப் பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஐந்து தினங்கள் நடைபெறவிருக்கும் பனம்பொருள் அபிவிருத்தி சர்வதேச மாநாட்டில், பனைவளத் தோடுதொடர்புடைய பதினைந்து நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள்.

இம்மாநாட்டிற்கான அங்கீகாரத்தை பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை வழங்கியுள்ளார்.

பெப்ரவரி மாதம் 21ம் திகதி வரை தொடர்ந்து ஐந்து நாட் பிரதிநிதிகள் பனைவளம்பற்றி ஆரம்பமாகவுள்ள இப்பனம் களுக்கு நடைபெறவுள்ளது. உலக ரீதியாக நடாத்தப்பட பொருள் அபிவிருத்தி சர்வ பனைவளத்தோடு தொடர்புவுள்ள இ பனம்பொருள் அபி தேச மகாநாடு 25ம் திகதி உடைய பதினைந்து நாடுகளின் [8-ம் பக்கம் பார்க்க]

## மாங்காய் வாங்கவந்த தாகக்கூறி

# மூதாட்டியிடம் தாலிக்கொடி சங்கிலி கொள்ளை!

[மாவிட்டபுரம்]

மாங்காய் வாங்கவந்த இருவர் வீட்டில் தனியே இருந்த 60வயது மூதாட்டியின் தாலிக்கொடியையும், சங்கிலியையும் கொள்ளையடித்துச்சென்றுள்ள சம்பவம்நேற்றுக் காலை கொல்லங்கலட்டியில் நடந்துள்ளது

பொன்னம்பலம் செல்லம்மா என்ற 60 வயது மூதாட்டி வீட்டிலிருந்தபோது மரத்தோடு மாங்காய் தீர்த்து வாங்க வந்ததாக கூறி இரு இளைஞர் வீட்டிற்குள் சென்று சிரித்துபேசி இனித்துகதைத்து மூதாட்டியிடம் வெற்றிலையும்வாங்கி சாப்பிட்டார்களாம், மாங்காய் விலைபேசி முடிந்ததும் திடீரென இருவரும் பாய்ந்து மூதாட்டியின் கழுத்தை நெரித்து வாய்க்குள் துணியை அடைத்துவிட்டு 20 தங்கபவுண் தாலிக்கொடியையும்,சங்கிலியையும் கொள்ளையடித்துச் சென்றுவிட்டதாக கூறப்படுகிறது.

இச்சம்பவம்பற்றி காங்கேசன்துறை பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## வடபிராந்திய

# பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் 15ம்திகதி முதல் இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

வடபிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபரின் கீழ் இயங்கும் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் இம் மாதம் 15ம திகதி தொடக்கம் வருடாந்த இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சுன்னாகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் பொன். சுகுணேந்திரன் மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகவும், புத்தளம் பொலிஸ்நிலைய இன்ஸ்பெக்டர் எஸ். இராசலிங்கம் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகவும் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

கொழும்பு பொலிஸ் தலைமை நிலைய இன்ஸ்பெக்டர் ஐ. போதோஜா யாழ்ப்பாண தலைமைக்காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டராகவும், பம்பலப்பிட்டி குற்றத்தடுப்பு பொலிஸ் இன்ஸ்பெக்டர் கே. ஆர். இராமச்சந்திரன் காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரியாகவும்,

(8-ம பக்கம் பார்க்க)

## சிமெந்து தொழிற்சாலை திருட்டு:

# 7 சந்தேக நபர்கள் கைது திருடப்பட்ட இயந்திரம் மீட்பு

[யாழ்ப்பாணம்]

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் நடைபெற்ற திருட்டுச் சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் ஏழுபேரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

இவர்களை விசாரணை செய்த காங்கேசன்துறைப்பொலிசார் சிமெந்து தொழிற்சாலையிலிருந்து திருடப்பட்டதாகக் கருதப்படும் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் இயந்திரம் ஒன்றையும் மீட்டுள்ளனர்.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை திருட்டுச் சம்பந்தமாக. விசாரணை செய்வதற்கு காங்கேசன்துறை உதவி பொலிஸ் அதிபர் குணசேனனு மடு, பொலிஸ் இன்ஸ்பெக்டர் சி ஐயாத்துரை தலைமையில் விசேஷ

[8-ம் பக்கம் பார்க்க]

# முதலாம் சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டார்

## ஆறு சந்தேகநபர்கள் விடுதலை

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை மோட்டார் யந்திரம் திருட்டு வழக்கில் முதலாவது சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் மற்றும் 6சந்தேக நபர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

மல்லாகம் நீதிமன்றத்தில் நீதவான் திரு. சி. வி. விக்கினேஸ்வரன் முன்னிலையில் சந்தேக நபர்களான சி. குணரத்

(8-ம் பக்கம் பார்க்க)

# திருடப்பட்ட பித்தளை கம்பிகளும் மீட்பு!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை மோட்டார் யந்திரம் திருட்டு தொடர்பாக விசாரணை நடத்திய பொலிசார் விசாரணையில் கிடைத்த தகவலை தொடர்ந்து 300 ரூபா பெறுமதியான பித்தளை கம்பிகளை மீட்டுள்ளனர்.

சிமெந்து தொழிற்சாலை

(8-ம் பக்கம் பார்க்க)

## புலோலியில் திருடப்பட்ட

# தளபாடங்களை பொலிஸார் தாளையடியில் மீட்டனர்!

[புலோலி]

புலோலியில்திருட்டுப்போன சுமார் 1000 ரூபா பெறுமதியான வீட்டுத் தளபாடங்களை தாளையடியில், வீடொன்றில் வைத்து மீட்டுக்கொண்ட பருத்தித்துறைப் பொலிசார் இரு இளைஞர்களையும் கைது செய்தனர்.

புலோலி தெற்கில் வசிக்கும் தவச்செல்வம் ஆனந்தன் என்பவரது வீட்டில் இருந்த கதிரைகள், ரீப்போக்கள் உட்பட 1,000 ரூபா பெறுமதியான தளபாடங்களை இரவு வேளையில் திருட்டுப்போயிருந்தது இதுசம்பந்தமாகப் பருத்தித்துறைப்பொலிசில் புகார் செய்யப்பட்டிருந்தது.

பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப்பதில் பொறுப்பதிகாரி திரு. இரத்தினாயக்கா தலைமையிலான பொலிஸ்கோஷ்டி இத்திருட்டுச் சம்பந்தமாகப் புலன் விசாரணைகளை மேற்கொண்டது. இதனைத் தொடர்ந்து ஆனைவிழுந்தான் சந்தியில் வைத்து இத்தளபாடங்கள் பஸ் ஒன்றில் ஏற்றப்பட்டு தாளையடிக்குக் கொண்டுசெல்லப்பட்டு வீடொன்றில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிசாருக்குத் தகவல் கிடைத்தது.

இதனைத்தொடர்ந்து தாளையடிக்கு விரைந்த பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி திரு இரத்தினாயக்கா தலைமையிலான பொலிஸ் கோஷ்டி தாளையடி அரசினர் வைத்தியசாலைக்கு அருகாமையில் இருக்கும் வீடொன்றில் வைத்து களவுபோன தளபாடங்களை மீட்டதுடன் சந்தேகத்தின் பேரில் அல்வாய் மாலிசந்தியைச் சேர்ந்த சபாரத்தினம் ஸ்ரீதரன், சபாரத்தினம் சிவபாலன் என்ற இரு இளைஞர்களையும் கைதுசெய்தது.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

மானிப்பாய் மெமோறியல் பாடசாலைக்குப் பக்கத்தில் அமைந்த 8 பரப்பு 4 குளிக் காணி விற்பனைக்குண்டு. ஒரு மித்தோ, பகுதியாகவோ பிரித்து வாங்கலாம் திசராஜா, உடுவில் வீதி. (மானிப்பாய் சந்திக்கு அருகில்), குபேரபுரி, மானிப்பாய். (5716)

உரும்பிராய் இந்துக்கல்லூரி ஒழுங்கையில் யாழ்ப்பாணம் பலாலி வீதியிலிருந்து 200யார் தூரத்தில் – தென்னை, பலா, மின்சார வசதியுள்ள வீடு கட்ட உகந்த 5½ பரப்பு நல்ல உறுதியுடன் விற்பனைக்கு தொடர்புகொள்க T S. தம்பையா, "சண்முகவாசா" சர்ச் வீதி, சங்கானை. 5666

9x10 — 7x10 அளவு இரண்டு சோடி இரும்பு சுருக்குக் கேற் சுழற்றிய நிலையில் விற்பனைக்குண்டு. S A. C. ஆபித், 108/2, தலீபா அப்துல் காதர் வீதி, சோனகதெரு, யாழ்ப்பாணம். (5713)

### வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி – கொன்வென்ற் வீதி சந்தியில் சகல வசதிகளும் கொண்ட கடை ஒன்று வாடகைக்கு உண்டு. S T. தில்லைநாதன், 428, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (5718)

### பயிற்சிகள்

அரச அங்கீகாரத்துடன் வெளிநாடுசெல்பவர்களுக்கும், வெளிநாடு செல்லவிருப்பவர்களுக்குமென விசேட வெல்டிங், மோட்டர்மெக்கானிசம், வயறிங், வகுப்புகள் 5-1-83ல் ஆரம்பமாகின்றன யாழ் நகரில் அதிக செய்முறை அறிமுறையுடன் குறுகிய காலத்தில் நடைபெறும் பயிற்சி இதுவாகும். விசேட ஆங்கிலமும் போதிக்கப்படும். அரசாங்க அங்கீகாரம் பெற்ற THE JAFFNA ENGINEERING COLLEGEல் விபரங்களை அறிந்து கொள்ளுங்கள். அதிபர். J. E. C. 33 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் யாழ் புகையிரதக் கடவைக்கு அருகில். குறிப்பிட்ட திகதிக்கு முன் நேரில் வருவோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். 5711

### யாழ்ப்பாண அக்கடமி
### க. பொ. த. உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 1983
### மீட்டல் வகுப்புகள்

வகுப்புகள் 17-1-1983ல் ஆரம்பமாகின்றன. பாடத்திட்டம் முற்றாக மீட்டல்செய்யப்படும், சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் விபரங்கள் தேவையாயின் காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம்.

அதிபர்.

தொலைபேசி எண்: 22617,
376, பிரதானவீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். 5698

### வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## "யாழ். மாவட்டத்தில்

# மாடு வளர்ப்புக்கு குறுகிய காலத்திட்டம் அவசியம்"

## கால்நடைவளர்ப்போர் சங்க புனருத்தாரண கூட்டத்தில் பரு. எம். பி.

(கரவெட்டி நிருபர் எஸ் சுபேந்திரன்)

யாழ் மாவட்டத்தில் கூடுதலான பசுமாடுகளை வளர்த்து பெருமளவு பாலைப் பெறக் கூடிய வாய்ப்பிருந்தும் ஏராளமான பசுக்களுக்கு ஏற்படும் மடி அழற்சி நோயின் காரண இ' முயற்சி எதிர்பார்த்த வெற்றியளிக்கவில்லை".

இவ்வாறு பருத்தித்துறை எம் பி, திரு. கே. துரைரத்தினம், வடமராட்சிப் பகுதி கால்நடை வளர்ப்போர் சங்கப் புனருத்தாரணப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் கவலை தெரிவித்தார்.

திரு ப ப. தாமு தலைமையில் நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்தில் நடந்த இப் பொதுக்கூட்டத்தில் பருத்தித்துறை எம். பி. திரு. துரைரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"மழைகாலங்களில் நாம் வீடுகளில் வரம்புகட்டி மழை நீரைத் தேக்கி வைத்தால் வரட்சிகாலப் பிரச்சினையைப் போக்கலாம். வடமராட்சிப் பகுதியில் வல்வெட்டித்துறைப் பகுதியில் 25 ஆயிரம் முதல் 30 ஆயிரம் வரையிலான கோழிகள் வளர்க்கப்பட்டுவருகின்றன. பண்ணையாகக் கோழி வளர்க்கவேண்டும் என்ற அவசியம் தேவையில்லை. ஒவ்வொரு குடும்பத்திலும் தலா பத்துக் கோழிகள் மாத்திரம் வளர்த்தால் போதுமானது. நெல்லியடி மத்தியமகாவித்தியாலயத்திலுள்ள விவசாயப் பண்ணை எதிர்காலத்தில் முன் மாதிரியான பண்ணையாக விளங்குமென்று கருதியே உருவாக்கப்பட்டது. ஆனால் அதன் இன்றைய நிலையைப் பார்க்கின்றபோது வேதனையடையாமல் இருக்கமுடியாது. இந்த நிலையை உணர்ந்து வடமராட்சிப்பகுதி கால்நடை வளர்ப்போர் சங்கம் இப் பகுதி கால்நடை வளர்ப்போரை ஊக்குவித்து அவர்கள் மூலம் இப் பகுதிக்கு நல்ல ஒரு எதிர்காலம் மலர நடவடிக்கை எடுக்க வேண்டியது மிக மிக அவசியமானது. யாழ் மாவட்டத்தின் சூழலையும், குறிப்பாக விவசாயப் பகுதியாக விளங்கும் கிளிநொச்சித் தொகுதியையும் நோக்குமிடத்து மாடு வளர்ப்பின் மூலம் இம்மாவட்டத்தை முன்னேற்றக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. "எனவே, யாழ். மாவட்டத்தில் மாடு வளர்ப்பிற்கென குறுகியகாலத்திட்டம் உருவாக்கப்பட்டு அதன் மூலம் இம் மாவட்டத்திற்கென தனி மாட்டு இனம் ஒன்றும் உருவாக்கிக் கொடுக்கப்படவேண்டும்" என்றார்.

உடுப்பிட்டி எம். பி, திரு. இராசலிங்கம் பேசுகையில் கூறியதாவது;

"வாழ்க்கைச்செலவு கூடிக் கொண்டுபோகும் இவ்வேளையில் குடும்பத் தலைவரின் வருவாயை மாத்திரம் எதிர்பார்த்து குடும்ப அங்கத்தவர்கள் சும்மா இருந்துவிடக்கூடாது. கால்நடை அபிவிருத்தியைப் பொறுத்தவரையில் மூலதனப் பிரச்சினையும், சந்தைப்படுத்தலும் பெரும் பிரச்சினையாகவுள்ளது. கால்நடை அபிவிருத்திக்கு வேண்டிய நிதி உதவிகளைச் செய்து கொடுக்கக் கூடிய நல்ல திட்டங்கள் ஆக்கிக் கொடுத்தல் அவசியமானது கால்நடை வளர்ப்பில் குறிப்பாக பாலைச் சேகரித்து, அதனைப் பாதுகாத்து விநியோகிக்கும் திட்டம் உருவாக்கப்படுமாயின் அதற்குரிய நிதி உதவியை நானும் பருத்தித்துறை எம். பி. யும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் இருந்து பெற்றுக்கொடுப்போம்". இவ்வாறு அவர் கூறினார்.

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு ஈ ஐயாத்துரை, பேராசிரியர் திரு வீ. கே. கணேசலிங்கம், யாழ் உதவி உள்நாட்டு வர்த்தக ஆணையாளர் திரு ரீ. மார்க்கண்டு, வட மராட்சி கால்நடை வைத்திய அதிகாரி திரு த. கதிரவேற்பிள்ளை உட்பட பலர் உரையாற்றினார்கள்.

# மண்டைதீவில் நடந்த முதியோர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 31-ம் திகதி வெள்ளிக்கிழமை உலக ரீதியில் நடைபெற்ற சர்வதேச முதியோர் தினவிழா மண்டைதீவுக் கிராமத்தில் மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது.

மண்டைதீவு மகாவித்தியாலய மண்டபத்தில் மண்டைதீவு கிராமோதய சபையினால் நடத்தப்பட்ட இவ்விழாவில் 300 வயோதிபர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

மண்டைதீவு கிராமோதய சபையின் தலைவர் திரு. இ. நா. இராசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் வட்டாரரீதியாக தெரிவு செய்யப்பட்ட முதியவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

இக்கிராமத்தின் மூத்த பிரஜைகளாக இவ்விழாவில் தெரியப்பட்ட 93 வயதையுடைய திரு க. ஆசைப்பிள்ளை, 90 வயதையுடைய திருமதி இ. விக்டோறியா 89 வயதையுடைய திரு. க.செல்லத்தம்பி ஆகியோர் வயதில் மூத்தவர்களுக்கான மூன்று பரிசில்களையும் பெற்றுக் கொண்டனர். கிராமோதயசபையின் தலைவர் திரு. இராசலிங்கம் இப்பரிசுகளை வழங்கினர்,

இவ்விழாவில் வயோதிபர்களுக்கான இலவச வைத்திய சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டன மண்டைதீவு அரசினர் வைத்திய அதிகாரி தலைமையில் இவ்வைத்திய பரிசோதனைகள் நடைபெற்றன. இக்கிராமத்தில் 65 வயதுக்கு மேற்பட்ட சமூக சேவைகளில் ஈடுபட்ட முதியவர்களுக்கு மண்டைதீவு மறுமலர்ச்சி இயக்கம் பரிசுகள் வழங்கியது இப்பரிசில்களை மறுமலர்ச்சி இயக்கத்தலைவர் திரு சி.பாலசிங்கம் வயோதிபர்களுக்கு வழங்கினர்.

இக்கிராமோதய சபையில் உள்ள உறுப்பினர்களில் வயது முதிர்ந்தவரான திரு. ஏ. வேலுப்பிள்ளை இக்கிராமோதய சபையின் கௌரவப் பரிசொன்றை பெற்றார் முதியவர்களைக் கௌரவிக்கும் வகையில் மண்டைதீவு மாதர் சங்கம் முதியவர்களுக்கான சிற்றுண்டி வகைகளையும் குளிர்பான வகைகளையும் வழங்கியது.

விசேடசேவை அலுவர் திரு. கே. சிவகுலசிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினர், கிராமோதய சபைத்தலைவர் திரு. இ. நா, இராசலிங்கம் சுகாதார பரிசோதகர் திரு. கே. சிவசுப்பிரமணியம் மறுமலர்ச்சி திரு. சி. பாலசிங்கம் கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் திரு. செ. இருதயநாதர் இளைஞர் கழகத் தலைவர் திரு ச. ஜெயரத்தினம் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

இக்கிராமோதய சபையின் உறுப்பினர்களான திருவாளர்கள் நா. கனகலிங்கம் ச. ஜெயரத்தினம், அ. ஜெயகுணதிலகம், செ. அ. சிறிபத்மராசா, ஏ.வேலுப்பிள்ளை வெ அமிர்தலிங்கம வ. கணபதிப்பிள்ளை, மா. இராசலிங்கம் சமாதான நீதவான் இ கந்தையா செல்வி ஞானமணி நடராசா திருமதி ஈஸ்வரி நடராசா உட்பட பலர் முதியவர்களுக்கு பரிசில்களை வழங்கினர்.

சபையின் செயலாளர் திரு. சிவகுலசிங்கம் நன்றியுரை வழங்கினர். (வண். நிரு)

# குற்றச்செயல்கள் கடந்த ஆண்டில் அதிகரிப்பு!

[கொழும்பு]

சடந்த ஆண்டில் [82, முன்னைய ஆண்டைவிட [81] குற்றயச்செயல்கள் அதிகரித்துள்ளன என்று பாதுகாப்பமைச்சின் குற்றச்செயல்கள் இணைப்புச் செயலகம் புள்ளிவிபரங்களுடன் பட்டியல் ஒன்றைவெளியிட்டுள்ளது.

இப்பட்டியல் விபரம்வருமாறு:

| குற்றச்செயல்கள் | 1981 | 1982 |
|---|---|---|
| ● கொலைகள் | —871 | 910 |
| ● வழிப்பறிக் கொள்ளை | — 65 | 119 |
| ● கோஷ்டிக் கொள்ளைகள் | — 46 | 67 |
| ● வங்கிக்கொள்ளை | — 1 | 1 |
| ● வீடுடைப்புக்கொள்ளை (ரூபா 5000 கீழ்) | — 600 | 658 |
| ● வீடுடைப்பு கொள்ளை [ரூபா 10.000 மேல்] | — 207 | 217 |
| ● வீடுடைப்புக் கொள்ளை [ரூபா 50,000 மேல்] | — 55 | 71 |
| ● வீடுடைப்புக்கொள்ளை [ரூபா 1,00,000மேல்] | — 13 | 18 |
| ● ஆயுதக் கொள்ளை | — 93 | 107 |
| ● வாகனங்கள் கொள்ளை | — 56 | 137 |
| ● சிறைக்கைதிகள் தப்பியோட்டம் | — | 170 |

(ஐ)

# "செய்யாத ஒன்றைச் செய்ததாகச் சொல்வது அரசியல் வாதிக்கு அழகல்ல!"

## மன்னாரில் எம். பி. சூசைதாசன்

[மன்னார்]

"எவராக இருந்தாலும் சரி தாம் செய்யாததொன்றைச் செய்தேன் எனச் சொல்லக் கூடாது. நாம் செய்ததையே சொல்லவேண்டும்".

இவ்வாறு மன்னார் திறந்த வெளியரங்கில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் கூட்டமொன்றில் உரையாற்றிய மன்னார் எம் பி திரு. சூசைதாசன் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. பி எம். செபமாலை, மன்னார் மாவட்ட விவசாயிகள் சங்கத் தலைவர் திரு. எஸ் செவந்தரநாயகம், சட்டத்தரணி செல்வி எம். அருள்சீலி டயஸ், மன்னார் சுதாகர் ஆகியோரும் உரையாற்றினர்.

இக்கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய மன்னார் எம். பி. மதகுரையில் கூறியதாவது;– மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சில அரசியல் வாதிகள் யாரோ செய்த திட்டங்களைத் தாமே செய்ததாகப் பிரசாரம் செய்து அரசியல் லாபம் தேட முயற்சிக்கின்றனர்.

"மன்னார் கொழும்பு நேரடித் தொலைபேசி சேவையை ஆரம்பிப்பதற்கான தன்னியக்க தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையப்பெட்டியை நான் மன்னாருக்கு வரவழைத்தேன். தனை வேறுசலர் தாமே வரவழைத்ததாகப்பிரசாரம் செய்கின்றனர்.

இத்தன்னியக்க தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையப் பெட்டியை மன்னாருக்கு அவர்களே வரவழைத்தார்களானால், அதற்காக யாரிடம் தொடர்பு கொண்டார்கள், யாருடன் கடிதத்தொடர்பு கொண்டார்கள் என்பதை நிரூபிக்கட்டும்.

இத்தன்னியக்க தொலைபேசி பரிவர்த்தனை நிலையப் பெட்டியை மன்னாருக்குக் கொண்டு வர நான் எவ்வளவு சிரமப்பட்டேன் என்பது எனக்கே தெரியும்.

"மன்னார் — கொழும்பு நேரடி தொலைபேசி சேவையை ஆரம்பிக்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் கேட்டு இத்தன்னியக்க தொலைபேசி பரிவர்த்தனை நிலையப் பெட்டியை பெற்றேன் அதன் பின் இப்பாரிய தன்னியக்கத் தொலைபேசி பரிவர்த்தனைப் பெட்டியை மன்னாருக்குக் கொண்டு வருவதற்குப் பல சிரமங்களை அனுபவித்தேன்.

எவ்வளவோ சிரமங்களுக்கிடையில் தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையப்பெட்டியை நாம் இங்கு கொண்டுவந்தபின் வேறு யாரோ கொண்டுவந்ததாகப் பிரசாரம் செய்யப்படுகிறது. இது அரசியல்வாதிகளுக்கு அழகல்ல".

## மணிவாக்கு

'இந்த நாடுகடத்தப்பட்ட அந்நியன் நமக்கு வேண்டாம். அவன் முகமும் பேச்சும் நமக்கு மாறுபட்டுள்ளன என்று கூறும்போது, அந்த வசனங்களால் நீங்கள் அமெரிக்காவை மறுக்கிறீர்கள் என்பது ஞாபகமிருக்கட்டும்.

—ஸ்டீபென்ஸன் செனிபெனட்

# நமது நோக்கு

## சமாதான சாயை

சீனமக்கள் குடியரசுக்கும் சோவியத்துக்குமிடையே 20 வருடங்களுக்குப்பின் நட்புறவுமுளைக்கும் அறிகுறி தென்படுகின்றது; இருதேசங்களும் இதில் நம்பிக்கை கொண்டுள்ளன. நல்லசெய்தி.

இரண்டு கம்யூனிஸ்ட் தேசங்கள் ஒற்றுமைப்பட்டிருப்பது ஆசிய அமைதிக்கு நிச்சயம் உதவும்

சீனவும் இந்தியாவும் எல்லைத் தகராறால் ஏற்பட்ட பிணக்கையும் போரையும் மறந்து இதனைப் பேச்சு வார்த்தைகளால் முடிவு கட்ட முன்வந்துள்ளன; இதுவும் நல்ல பயனளிக்கட்டும்!

சோவியத் ரஷ்யா, சீன, இந்தியா ஒன்றுபட்டுவிட்டால் ஆகிய நாடுகளில் ஐரோப்பிய அட்டகாசம் ஆலகுவில் தலைகாட்ட மாட்டாது. இவ்வித நினைவு இனித்தாலும், அப்படி நடக்குமென அறுதியிட்டுக் கூறமுடியாது; எத்தனை 'சகுனிகள்' ஆசியாவில் உண்டோ? தெரியவராது.

உலகத்தின் தலைவிதி அமெரிக்காவும், ரஷ்யாவும் நடந்துகொள்வதில் தங்கியிருக்கிறது. இதனை எவரும் ஆட்சேபிக்க மாட்டார்; ஆனல் இவ்விருவல்லரசுகளும், போரை நிறுத்திக்கொண்டாலும், இன்று நடைபெறும் பனிப்போரை நிறுத்தமுடியுமா வென்பதே முக்கிய கேள்வி:

கேள்வியின் பொருத்தத்தில் தங்கியிருப்பது சரியான விடை.

ஐரோப்பிய கேந்திர ஸ்தானங்கள் அனைத்திலும் இவ்விரு வல்லரசுகளும் ஏவுகணைகளை நிறுத்தியிருக்கின்றன; அல்லது நிறுத்தவிருக்கின்றன என்று வைப்போம

கேள்வி: இந்த நிலையில் மூன்ருது உலக யுத்தம் ஆரம்பமாகுமா அல்லது உலக சமாதானம் ஏற்படுமா? இதில் எது விடையென்ருலும் அது பிழையென்றே கொள்ளவேண்டும்

ஜனதிபதி றீகனை மக்கள் தெரிவு செய்தது. அமெரிக்காவையும் அகில உலகையும் அழிக்கவா?

இல்லை: அமெரிக்கா இழந்த செல்வாக்கை மீண்டும பெறுவதற்கே!

எனவே ஜனதிபதி உலக சமாதானத்தை நிலைநாட்டி அமெரிக்காவுக்கு சுகவாழ்வு தேடுவாரா?

சொலலமுடியாது; உலக சமாதானம அவர் கையில் மட்டுமில்லை; அமெரிக்காவுக்கு சுகவாழ்வு தேடுவதில் அவருக்கு அதிக ஆசை; அதிலும் கூடிய ஆசை மறுமுறையும் ஜனதிபதியாகத் தெரிவு செய்யப்படுவதே!

உலக சமாதானம் அவர் கையில் மட்டுமில்லையென்ருல் அந்த லட்சியத்துக்கு இட்டுச் செல்வதற்கு அவர் வேறென்ன செய்யவேண்டும்?

இக்கேள்விக்கு விடையளிப்பது கடினம்; நாம் ஜனதிபதியாகப் பேச வேண்டுமானல் இப்படி விடையளிப்பதும் நியாயமென்று நினைக்கிறோம்:

ரஷ்யா தனது கம்யூனிசக் கொள்கையை உலகெங்கும் பரப்பி வருகிறது. அமெரிக்கா போன்ற தனி மனிதனின் சுதந்திர வாழ்வை அடிப்படையாகக் கொண்ட நாடுகளுக்கு இது ஒரு பெரிய அபாயம்; ரஷ்யா இதற்கென ஒரு மாபெரும் ராணுவ அமைப்பை விருத்தி செய்திருக்கிறது அவர்களைத் தலையெடுக்க விடாமல் எங்கும் என்றும் ஏவுகணைகளால் விரட்ட சமுத்திரத்தில் கடற்படையால் அச்சுறுத்த தயாராவதே ஒரு தனிவழி

இந்த விடை முற்றும் சரியில்லாவிட்டாலும் ஜனதிபதியின் குறிக்கோளை விளக்குகிறது. "சமாதானம் வேண்டுமென்ருல் சண்டைக்குத் தயாராகு!" பழைய சித்தாந்தம்.

இந்தியாவுடன் நல்ல பிள்ளைபோல் பேசிவிட்டு பாகிஸ்தானுக்கு F 16 சண்டை விமானங்கள் தாராளமாக விற்பனை செய்கிறது அமெரிக்கா!

"ஐயோ இந்தச் சொல் இந்தியாவுக்கு ஆபத்து; நாம் பாகிஸ்தானுடன் நட்புறவு நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கியிருக்கிறோம்" என்று கூக்குரலிடுகிறு இந்திரா.

சோவியத் ரஷ்யா – உங்களுடைய சோவியத் ரஷ்யா யோக்கியவானு? ஆப்கான் விடயத்தை கண்டித்தீரா? என்றொரு கண்டனக்கணை இந்திராவில் வீழ்கின்றது.

ஏ மகனே! நாங்கள் என்றும் ரஷ்யாவை இந்த விடயத்தில் கண்டித்திருக்கிறோம்! வெறும் கண்டனங்களால் கறிசமைக்கலாமா? அரசியல் தந்திர நடவடிக்கைகளும் அவசியம்; நீர் வேறுநாடுகளில் — ஆசிய, ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளில் – இடம் பெறும் தலையீடுகள் பற்றி கவலை கொள்ள வில்லையே!

புதுவருடத்தை வரவேற்கும் போக்கில் உலக அரங்கில் நடைபெறும் நடனம் இது.

அமெரிக்கா ஒரு பெரும் நாகரிகத்தை வளர்த்து வரும் ஒரு புதிய தேசம் பல வறிய நாடுகளுக்கு கொடை வள்ளலாகத் திகழ்கின்றது.

ரஷ்யா, தனது பழமையை குழிதோண்டிப் புதைத்து ஒரு சிறந்த சோஷலிச வாழ்க்கை முறையை உலகுக்கு அறிமுகப்படுத்தித் தனது 60 ஆண்டு வெற்றியை இன்று கொண்டாடுகிறது.

இவ்விரண்டும் இந்தப் பரந்த உலகில் சமாதானமாக வாழ இடமுண்டு.

இருப்பினும் உலக சமாதானம் உண்மையில் உருவாகுதென்று நம்பிவிட முடியாது: ஒருவரை ஒருவர் குட்டி முந்தும் போட்டியில் ஈடுபடுகின்றன.

சமாதானம் எமது உயிரென்று கொள்ளும் மூன்ரும் உலக நாடுகள் இந்தப் போட்டி நாடகத்தில் பங்கு கொள்ளலாகாது. வெறும் பாசாங்கும் அபாயமானது.

இலங்கை உட்பட இந்து சமுத்திரக்கரை நாடுகள் இரட்டை நாக்கை ஒழித்து ஜாக்கிரதையாகவிருப்பதே பெரும் பணியாகும்.

# இருதய நோயைத்தவிர்க்க டாக்டர் தரும்யோசனைகள்

## ஜனதிபதி, பிரதமரை உதாரணம் காட்டுகிருர்!

(கொழும்பு)

"இருதய நோய்கள் பீடிப்பதை தவிர்த்துக்கொள்பவர்களுக்கு நமது ஜனதிபதியும் பிரதமரும் நல்ல உதாரணங்களாக இருக்கிருர்கள். இவர்களது இயக்கம் இருதயநோய்களைத் தடுக்க விரும்புபவர்களுக்கு நல்ல முன்மாதிரி"

இவ்வாறு அமெரிக்காவில் கடந்த 17 வருடங்களாக சேவையாற்றும் டாக்டர் ரி.ஏ. டொன்மைக்கேல் தெரிவித்துள்ளார். இலங்கையரான இவர் தற்போது விடுமுறையைக் கழிக்க இங்கு வந்துள்ளார்.

இவர் தமது கருத்தில் மேலும் தெரிவித்ததாவது: "ஜனதிபதி, பிரதமமந்திரி ஆகியோர் தமக்கிருக்கும் கடினமான உழைப்பின் மத்தியிலும் தமதுதேகமன நிலைகளை நிதானமாக வைத்துக் கொள்கின்றனர்.

தமது நடவடிக்கைகளை திட்டமிட்டு செயல்படுத்துகின்றனர்; பதட்டப்படுவதில்லை. ஆகையினல் அவர்கள் இருதய நோய்களற்ற சுகதேகிகளாக உள்ளனர்.

கொழுப்புமிக்க உணவு, அதிகளவு மாமிசம் தேங்காய் எண்ணெய், அதிகளவு சீனி ஆகியனவற்றை உட்கொள்வதை பெருமளவு தவிர்த்தலும் இருதயநோயை தடுத்தலுக்கு ஏற்ற வழிமுறைகளாகும்

புகைபிடித்தலும் இருதய நோய்களுக்கான மூலகாரணங்களில் ஒன்று பின்லந்து தேசத்தவர் பலர் புகைபிடித்ததனல் இருதய நோயாளிகளானர்கள் ஆனல் அந்நாட்டில் தற்போது புகைத்தல் அரைவாசிக்கு மேற்பட்டோரால் கைவிடப்பட்டுள்ளது இதனல் இருதய நோய்களும் அங்கு குறைவடைந்துள்ளது

சில விஞ்ஞான – மருத்துவ ஆராய்ச்சிகள் இதனை வெளிக்காட்டியுள்ளன

கொழும்பு போன்ற பெரும் நகர்ப்புறங்களில் வைத்திய வசதிகளைக் கொண்ட நடமாடும் அம்புலன்ஸ் வண்டிச் சேவை அதி அவசியமானது.

இத்தவண்டி எந்நேரமும் வைத்திய வசதிகளுடன், இருதய நோயாளிகளுக்கு முதலுதவிகளை வழங்கக்கூடியவர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

இதன்மூலம் வெகுவிரைவில் ஒருநோயாளியை அணுகி தகுந்த உதவியை, தகுந்த நேரத்தில் வழங்கலாம்.

அமெரிக்கா, பிரிட்டன், மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற தேசங்களில் இத்தகைய வைத்திய சேவைகள் எந்தவேளையிலும் தயார்நிலையில் இருக்கின்றன.

பாரிஸ் நகரில் இத்தகைய வைத்தியசேவை ஹெலிகாப்டர் விமானம்கொண்டும் வழங்கப்படுகிறது." (கி)

# இலங்கை தமிழர்பிரச்னை;

## "உலகத்துக்கு தெளிவாக்க வேண்டும்"

-- அமிர்தலிங்கம்

[சுண்டிக்குளி]

"ஐரிஸ் விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த திரு. பொபி ஸான்ட் பொதுத் தேர்தலில் நிறுத்தி ஐரிஸ் விடுதலை இயக்கத்தினுக்கு உலக நாடுகளின் அனுதாபத்தையும், ஆதரவையும பெற்றதுபோல் நாமும் நமது விடுதலைப்பணியில் பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட குட்டிமணியை வட்டுக்கோட்டை எம் பி யாக நியமித்து தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை உலக அரங்கினுக்கு வெளிப்படுத்திஞேம் உலகில் அனுமதிக்கப்படமுடியாத அநீதிகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் வழிசெய்யும் பயங்கரவாதத் தடைச்சட்டம் மூலம் இலங்கையில் தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கப்படுவதை உலக அரங்கில் தெளிவுபடுத்த வேண்டும் அதுவும் எமது விடுதலைப்பணிக்கு ஒரு வழியாக அமையும்"

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கடந்த ஞாயிறு சித்தன்கேணி ஸ்ரீமகா கணபதிப் பிள்ளையார் ஆலயத்தின் முன்றலில் நடைபெற்ற உண்ணுவிரதத்தை முடித்து வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வட்டு இளைஞர் பேரவையும், தமிழ் மாணவர் பேரவையினரும் கூட்டாகச் சேர்ந்து தடுப்புக்காவலிலுள்ள மதகுருமார், விரிவுரையாளர் தம்பதிகள், இளைஞர்களை நீதிமன்றத்தின்முன் நிறுத்தி சாதாரண சட்டத்தின்கீழ் விசாரிக்க அரசாங்கத்தைக் கோரியும் மேற்படி உண்ணுவிரதத்தை நடாத்தினர்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கம் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது; 'குட்டிமணி தான் பிரதிநிதிப்படுத்தும் தொகுதிக்கு சேவை செய்யவோ, தொகுதியின் தேவைகளை நிவர்த்திசெய்யவோ முடியாத நிலையில இருப்பதால் வட்டுக்கோட்டைத் தொகுதிபற்றிய தமது நியமனத்துக்கு மாற்று நடவடிக்கை எடுக்குமாறு கோரியதை நாம் ஆலோசிக்கவுள்ளோம. அரசாங்கத்தின் போக்கில் சில மாற்றங்கள் ஏற்படக்கூடும். மாற்றம் செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது ஆனல் எமது போராட்டத்தைத் தொடருவோம் அது எமது லட்சியமாகும்''.

தமிழ் மாணவர் பேரவைத் தலைவர் வேங்கை ஆனந்தன் தலைமையில் நடைபெற்ற இவ்வுண்ணுவிரதப் போராட்டத்தில் பெருமளவுக்கு இளைஞர்களும், முதியவர்களும் இந்து, இஸ்லாம, கிறிஸ்தவ மதகுருமார்களும் கலந்து கொண்டனர் தமிழ் இளைஞர் பேரவைச் செயலாளர் மாவை சேனதிராசா, யாழ். மாநகர சபை உதவி மேயர் அலோசியஸ்,

[5-ம் பக்கம் பார்க்க]

## மக்கள் கருத்து

### நல்லன செய்த பெருமகனை நினைவூட்டிய பஞ்சாங்கம்

தலைநகருக்கு வெளியே இருந்து தினமும் வெளிவருகின்ற ஒரு தமிழ் தேசிய செய்தி ஏடு என்ற சிறப்புப் பெற்று மிளிரும் இந்த "ஈழநாடு" இப்புதிய ஆண்டிலே சிறந்த பஞ்சாங்கத்துடன் கால் அடி வைத்து வீறுநடை போடுகிறது. இந்த ஆண்டு பஞ்சாங்கத்தின் நடுவிலே காட்சி கொடுக்கும் கொடை வள்ளல் டாக்டர் சி சுப்பிரமணியம் அவர்களை இன்றைய சமுதாயத்தில் பலர்க்குத்தெரியாது இப்பெருமகனுர் யாழ். நகருக்கு செய்த சேவையை நினைவு கூரவும் அவரை இன்றைய சமுதாயம் அறியவும் ஈழநாடு புதிய பஞ்சாங்கம் வழி வகுத்துள்ளது. நல்லன செய்த பெருமகனுரை ஞாபகமூட்டிய ஈழநாட்டுக்கு வாசகர் சார்பில் நன்றி கூறுகிறேன் ஈழநாட்டு "நமதுநோக்கு" வாசகர்களாகிய எமது முதல் நோக்காக கவர்ந்து மிளிர்கின்றது ஆசிரியர் அருமையான கருத்துக்களை சொற்ப சொற்களில் தெளிவூட்டுகிருர். தலைப்பைப் பார்த்து முடிவு கூற முடியாத நிலையில் இறுதி முற்றுப் புள்ளி வரை வாசகரை அழைத்து முடிவு சொல்கின்ற பாணியில் நமதுநோக்கு செயல்படுகின்றது. மேலும் பல் ஆயிரக் கணக்கான வாசகர்களின் சார்பில் ஈழநாடு நிறுவனத்தினருக்கும் வர்த்தகப் பெருமக்களுக்கும் அன்புடன் வேண்டுகிறோம். ஞாயிறு தோறும் வாரமலராக வெளிவந்த அறிவுக்களஞ்சியமான "ஈழநாடு வாரமலர்" அக்கினி ஈழநாடு காரியாலயத்தை அழித்தபோது அமைதி பெற்றது. இன்று ஈராண்டு காலம் கடந்து இறைவன் கடாட்சம் வாசகர் கவனம், நிறுவன நிர்வாகத்திறமை ஈழநாடு தினசரி தொடர்ந்து வெளி வந்து கொண்டிருப்பது பாராட்டப்படவேண்டியதாகும். இந்நிலையில் இப்புதிய ஆண்டில் விரைவில் ஈழநாடு வாரமலர் வெளிவர வாசகர்களாகிய நாம் மிகவும் ஆவல் அலையோடு இருக்கிறோம் வர்த்தகப் பெருமக்கள் நிறைந்த விளம்பர உதவி செய்து வாரமலரை வெளியிட உதவுவர் என்பது திண்ணம். இன்றைய பொருளாதார நிலைக்கு ஏற்ப ஓர் விலையுடன் ஈழநாடு வாரமலர் விரைவில் வெளிவர நிறுவனத்தினர், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், வாசகப் பெருமக்கள் முயற்சி எடுக்க ஈழநாடு வாசகப் பெருமக்கள் சார்பில் வேண்டுகிறேன்.

ஆறு-திருமுருகன்,
யாழ்ப்பாணம்.

சோவியத்யூனியனில்

# பிரிவினை, தனிப்பட்ட செல்வாக்கை வளர்ப்போர்மீது கடும்நடவடிக்கை

## 'சோவியத்கம்யூனிஸ்ட்'பத்திரிகைதகவல்

மாஸ்கோ, ஜன. 3

பிரிவினையை ஏற்படுத்துதல், தனிப்பட்ட செல்வாக்கினை வளர்த்துக்கொள்ளுதல் போன்றனவற்றுக்கெதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்று சோவியத்கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகையான 'கம்யூனிஸ்ட்' தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளதாவது: "ஐக்கியம் குலையாத கம்யூனிஸ்ட் கட்சியையே லெனின் கட்டி எழுப்பினார் இதனை திரு யூரி அந்ரபோவ தற்போது நிர்வகித்துச் செல்கின்றார்

கட்சிக்குள் ஐக்கியத்தைக் குலையச்செய்து பிரிவினையை உண்டாக்கி தனிப்பட்ட செல்வாக்கைவளர்க்க முற்படுவோர் மீது தலைமை பீடம் கடும் நடவடிக்கைகளை எடுக்கும்,

ஒருகோடியே எழுபது லட்சம்பேர் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியில் அங்கத்தவர்களாக உள்ளனர் இந்த அங்கத்தவர்கள் தனிப்பட்ட குரோதங்கள் அற்றவர்களாகவே இருந்து வருகின்றனர் இவர்களில் எவராவது கட்சியைப் பாதிக்கும் செயல்களில் இறங்கினால் அவர்கள் உடனடியாகக் கட்சியிலிருந்து நீக்கப்படுவார்கள்.

இத்துடன் திறமையின்மை ஊழல் மோசடி போன்ற குற்றச் செயல்களுக்கெதிராகவும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

சோவியத்தின் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவர்கள் சிலரிடையே இத்தகைய குற்றச் செயல்கள் காணப்படுவது தெரிய வந்துள்ளது

லைலஞ்சம் பெற்று சமுதாயத்தில் ஒட்டுண்ணிகளாக இருந்து மக்களை உறிஞ்சும் இவர்கள் தொடர்ந்தும் தகாத வழியில் செல்லாது அகரித்தல சுயநலப்போக்கு ஆகியனவற்றைக் கைவிட்டு திருந்தி நடத்தல் வேண்டும்.

இவ்வாறு கம்யூனிஸ்ட் பத்திரிகை தனது ஆசிரியத் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது. (கி)

---

## பேராசிரியருக்கு 'ஆரிய பட்டா' விருது

சென்னை ஜன 3

திருப்பதியில் நடைபெற்று வரும் இந்திய விஞ்ஞானப் பேரவை மகாநாட்டில இந்தியா பேராசிரியர் சதீஷ் தவான் கௌரவிக்கப்படவுள்ளார்.

இவருக்குமூன்றுண்டுகளுக்கு ஒருதடவை வழங்கப்படும் விஞ்ஞானத்துறைக்கான 'ஆரியபட்டா' விருது வழங்கப்படும். பிரதமர் திருமதி இந்திரா காந்தி இதனை இவருக்கு வழங்குவார்.

---

## உதவப் போன மேயருக்கு நேர்ந்த கதி!

நியுஓர்ளியன்ஸ் ஜன 3

நியு ஓர்ளியன்ஸ் மாநிலத்தின் சிறுநகரொன்றைச் சேர்ந்த டெறி மூஸ்கிரேவ் என்ற மேயர் அயலிலுள்ள பெரும் நகரொன்றிற்துச் சென்று கொண்டிருந்தார்!

வழியில் நெடுந்தூர வழிப்போக்கன் ஒருவன் மரமொன்றின் கீழ மழைக்காக ஒதுங்கி நின்றான்!

மேயர் டெறி அவனின் நிலையை அறிந்து தமது சிறிய டிரக் வண்டியில் அவனையும் ஏற்றிச்சென்றார்!

பாதி வழியில் அந்த வழிப்போக்கன் டிரக்வண்டியினுள் இருந்த மேயரின் சிறு கைத்துப்பாக்கியையே எடுத்து அவரை மிரட்டலானான்! சுமார் ஒன்றரை மணி நேரம் பணயமாகவும் அவரை வைத்திருந்தான்!

இறுதியாக தப்பிச் செல்லும் பொருட்டு மேயரின் தலையை நோக்கிச் சுட்டுவிட்டு ஓடலானான்! ஆனால் அப்பாவி மேயர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்!

அவரது 250 டாடலர்கள் பணம், 500 டாலர்கள் பெறுமதியான தங்க கைக்கடிகாரம் என்பன அந்த வழிப்போக்கனால் அபகரித்துச் செல்லப்பட்டனவாம்!

இந்த துக்ககரமான சம்பவத்துடனேயே அந்த மேயர் தாம் போய் சேரவேண்டிய இடத்தை அடைந்தார்.

மறுநாள் புதுவருடம்! அத்தினத்தில் "இனிமேலும் நான் இரங்கி நடப்பதைக் குறைத்துக்கொள்வேன்" என்று சபதம் எடுத்துக்கொண்டாராம்! (கி)

---

## 'பாக். அணு ஆராய்ச்சிகளை நிச்சயம் மேற்கொள்ளும்!"

**- ஜெனரல் ஹக்**

இஸ்லாமாபாத், ஜன 3

"பாகிஸ்தான் அணுஆராய்ச்சிகளை மேற்கொள்ளவே செய்யும் எக்காரணங்கொண்டும் அவற்றை நிறுத்திவிடமாட்டாது" என்று பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஷியாவுல் ஹக் தமது நாட்டுப் பத்திரிகையென்றிற்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவர் அப்பேட்டியில் மேலும் கூறியிருப்பதாவது:

"பாகிஸ்தான் அழிவுநோக்கங்களுக்காக அணுஆராய்ச்சிகளை மேற்கொள்ளவில்லை. இந்த ஆராய்ச்சிகள் அபிவிருத்திப் பணிகளுக்குப் பெரிதும் பயன்படக்கூடியவை. ஆகையினாலேயே பாகிஸ்தான் இதில் அக்கறைகாட்டுகின்றது" என்றார்.

அண்மையில் பிரதமர் திருமதி இந்திராகாந்தியைச் சந்தித்தது பற்றிக்கேட்ட கேள்வியொன்றிற்கு, "பிரதமர் இந்திராவுடனான சந்திப்பு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. அத்துடன் சுருக்கமாக ஆழமானவற்றைப் பேசிக்கொள்ளவும் முடிந்தது" என்றார் (கி)

---

## மணிலாவில் குண்டுவெடிப்பு

## 11 இளவயதினர் பலி! 59 பேர்படுகாயம்!!

மணிலா ஜன 3

பிலிப்பைன்ஸிலுள்ள தகரப் படக்கொட்டகையொன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 11 பேர் கொல்லப்பட்டனர் 59 பேர் படுகாயமடைந்தனர்.

கொல்லப்பட்டவர்களில் அநேகர் 21 வயதுக்குக் கீழ்ப்பட்ட வயதில் குறைந்தவர்களாவர் இவர்களில் 4 வயதுக் குழந்தையொன்றே மிகவும் இளமையானதென்று தெரிவிக்கப்பட்டது! காயமடைந்தவர்களிலும் 40 பேர் வயதில் குறைந்தவர்களே!

பிலிப்பைன்ஸின் தீவிரவாத இயக்கங்களில் ஒன்றான கம்யூனிஸ்ட்–புதிய மக்கள் இராணுவம் என்ற இயக்கமே இம் மரணங்களுக்குப் பொறுப்பு! என்று இராணுவத்தினர் தெரிவித்தனர்

மணிலாவுக்கு தெற்கேயுள்ள சிறிய நகரொன்றிலிருக்கும் இந்த இரண்டாந்தர திரைப்பட மாளிகை குண்டு வெடிப்பு நிகழ்ந்தபோது இரசிகர்களால் நிறைந்திருந்தது;

மூன்று இனந்தெரியாத நபர்கள் இவ்வெடிப்புநிகழ்ந்த சிறிது நேரத்தில் அந்த இடத்திலிருந்தும் ஓடிச்செல்வதைக் கண்டதாகவும் ஆனால் இதுவரை எவரும் கைதாகவில்லை என்றும் இராணுவம் தெரிவித்தது. (கி)

---

## அணு ஏவுகணைகள் உற்பத்தியை பிரான்ஸ் குறைக்காது!

பாரிஸ் ஜன 3

"அணு ஆயுத ஏவுகணைகளின் உற்பத்தியை பிரான்ஸ் குறைக்காது" என்று பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்சோ மித்ரோன் அறிவித்துள்ளார்

அவர்மேலும் "ஜெனீவாவில் நடைபெறும் அமெரிக்கா–சோவியத் ஆயுதப்பரிகரணப் பேச்சுக்களில் தமது நாட்டுக்கு அக்கறை இல்லை" என்றும் கூறியுள்ளார். (கி)

---

## மதுரை தமுக்கம் திடலில் 'மீலாத்' விழா!

மதுரை, ஜன. 3

மதுரைநகரில், முகமது நபிகள் பிறந்ததின வைபவமான மீலாத்விழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

தமுக்கம் மைதானத்தில் நடைபெற்ற இந்த வைபவத்தில் மாநில அமைச்சர் திரு ராஜாமுகமது உட்பட பல இஸ்லாமியப் பெரியார்கள் கலந்துகொண்டனர்.

முகமதுநபிகளின் வாழ்க்கை முறை, போதனைகள் ஆகியன பற்றி இப்பிரமுகர்கள் சொற்பொழிவுகளையும், விரிவுரைகளையும் நிகழ்த்தினார்கள்.

இந்தமீலாத்விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகமுன்னர் கண்ணைக்கவரும்வகையில் மாபெரும் வண்ணமிகுஊர்வலம் ஒன்றும்நடத்தப்பட்டது சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. பகீர் முகமது இந்த ஊர்வலத்தை ஆரம்பித்துவைத்தார். (கி)

---

## சமயத்தையும் அரசியலையும் கலக்கக்கூடாது

**-- ஸெயில்சிங்**

புதுடில்லி ஜன 3

"சமயத்தையும் அரசியலையும் ஒருபோதும் கலக்கக்கூடாது என்று இந்திய ஜனாதிபதி ஸெயில்சிங் தெரிவித்தார்

புதுடில்லியில் நடைபெற்ற சீக்கியமதத்தலைவர் 'குருநாத்' பிறந்ததின வைபவத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. ஸெயில்சிங் மேலும் கூறியதாவது: "ஆலயங்கள் மனிதமனங்களை பண்படுத்தும் சொற்பொழிவுகள் நிகழ்ச்சிகள் இடம் பெறும் இடங்கள்,

இங்கே அரசியல் பேச்சுக்களை நிகழ்த்தி மக்களைக் குழப்பிவிடக் கூடாது என்றார். (கி)

---

## குளிருக்கு 94 பேர் பலி!

புதுடில்லி ஜன 3

வட இந்தியாவில் குளிர் மரணங்கள் அதிகரித்து வருகின்றன இந்நிலைக்கு இப்பகுதிகளில் தொடர்ந்தும் கடுங்குளிர் நிலவி வருகின்றதே காரணமாகும்.

இறுதியாக பஞ்சாபில் ஐவரும், பீகாரில் அறுவரும் இறந்துள்ளனர். இவற்றுடன் சேர்த்து இறந்தவர்கள் தொகை 94 ஆக உயர்ந்துள்ளது (கி)

---

## சர்வதேச திரைப்படவிழா.

புதுடில்லி, ஜன3.

சர்வதேச திரைப்பட விழா இன்று புதுடில்லியில் ஆரம்பமாகவுள்ளது 50 நாடுகள் கலந்துகொள்ளும் இவ்விழாவில் 20 படங்கள் திரையிடப்படவுள்ளது.

---

கடந்த மூன்று மாதங்களில்

## 340 இஸ்ரேலிய வீரர்களை பி. எல். ஓ. கொன்றது!

## 43 வாகனங்களையும் சேதமாக்கியது!

**— யாஸிர் அரபாத் அறிவிப்பு**

பெய்ரூட், ஜன 3

"கடந்தமூன்றுமாதங்களில் பாலஸ்தீன கமாண்டோக்கள் லெபனானில் உள்ள இஸ்ரேலியப்படைகளுக்கு கணிசமான சேதங்களை உண்டுபண்ணியுள்ளன" என்று பாலஸ்தீன தலைவர் யாஸீர் அரபாத் தெரிவித்துள்ளார்

திரு. அரபாத் மேலும் கூறியிருப்பதாவது; "பாலஸ்தீன கமாண்டோக்களின் ராணுவ தாக்குதல்களில் கடந்த மூன்று மாதங்களில் 340 இஸ்ரேலிய ராணுவத்தினர் கொல்லப்பட்டனர் அவர்களது 43 வாகனங்கள் சேதமாக்கப்பட்டன"

திரு அரபாத் தொடர்ந்து தெரிவிக்கையில், லெபனானில் இஸ்ரேலியப்படைகள் நிலைகொண்டிருந்த, 'தஹ்ரே' என்ற தளம் தாக்கப்பட்டது தமது நடவடிக்கையென்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் தமது இயக்கத்தவர் அரசியல் ரீதியாகப் போராடும் அதே வேளை இராணுவ ரீதியிலும் தொடர்ந்து இயங்கிவருவார்கள் என்று கூறினார். (கி)

வெலிங்டன் ... 

வெல்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி.ஞாயிறு 2-30
கார்த்திக் — ராதா
அலைகள் ஓய்வதில்லை
(கலர்)

ராஜா யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ் - சரிதா
மௌனகீதங்கள்
(கலர்)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் — விஜயா
திருடி

இன்னும் சில தினங்கள்
றீகல் (யாழ். நகர்)
நான் (ஈஸ்ட்மன் கலர்)
விரைவில்
எங்கவீட்டுப்பிள்ளை

மனோகரா
(யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி — அஞ்சலிதேவி
மாதர் குல மாணிக்கம்
(புதிய பிரதி)

சாந்தி யாழ். 3—6-1-83வரை
10-30, 2-30, 4-45, 7-00, 9-30
NIGHT WING
IN THE DEAD OF NIGHT THEY COME...
SWIFT—SILENT—SAVAGE
An Action Thriller - Color


# இன்றைய பலன்

மார்கழி மாதம் 20ந் திகதி
திங்கட்கிழமை
[4—1—83]

மேடம்: அறிவுத் தாகம் மேலோங்கி நிற்கும், ஆராய்ச்சிகளில் ஈடுபடுவீர்கள், விருந்தினர்கள் வருகை உங்களுக்கு மகிழ்ச்சியைத்தரும், எதிர்பாராத பணம் கைக்குள் கிடைக்கலாம்.

இடபம்: துணிச்சலுடன் காரியங்களைச் சாதிப்பீர்கள், சிலருக்கு பொதுசனத் தலைமையும் கிடைக்கலாம், விவசாயிகள் வாழ்க்கையில் முன்னேற்றமுண்டு. மாணவர் கல்வியில் ஆர்வம் பிறக்கும்.

மிதுனம்: மனம் போல் வாழ்வு இன்றுமலரும், கடமையாற்றுமிடத்தில் சகல தொழிலாளர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும் சிலருக்குப் பதவி உயர்வும் கிடைக்கும்.

கடகம்: செய்தொழிலில் தடைகள் உருவாகும், மேலதிகாரிகளின்கழுகுப்பார்வை உங்கள் பக்கம் திரும்பும், சகோதரர் ஒருவருடன் பகைத்துக் கொள்ளவேண்டிய நிலை ஏற்படலாம்.

சிங்கம்: குமுறும் நெஞ்சத்துடன் நாளைக்கடத்துவீர்கள், எதிலும் அவசர முடிவைத் தவிர்த்துக் கொள்ளவும், உடல் நலத்தில் அதிக கவனம் செலுத்தவும். பிரயாணத்தைத் தவிர்ப்பதுநன்று

கன்னி: சமயோசிதமான நடவடிக்கைகள்மூலம் எதையும்சமாளித்துக்கொள்வீர்கள், இல்லத்தில் அமைதி நிலவும் பூமியால் இலாபமுண்டு, பேச்சுவார்த்தைகள் இன்று நல்ல பலனை அளிக்கும்

துலாம்: இதயத்தில் எரிமலை குமுறும், உள்வீட்டிலேயே உபத்திரவங்கள் அதிகரிக்கும், குழந்தை ஒன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம். ஆணவப் பேச்சினால் மற்றவர்களுடைய வெறுப்பைச் சம்பாதிப்பீர்கள்

விருச்சிகம்: புகழ்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள், அரசியல் வாதிகளுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும், எடுத்த சுருமத்தை முடிப்பதில் வெற்றியடைவீர்கள், பெரியோர் ஆசிகள் அவசியம் தேவை.

தனு: அதிஷ்டகரமான தினம், சிலர் வாழ்க்கையில் திரவிய லாபத்துக்கும் இடமுண்டு, மனை வாழ்வில் மகிழ்ச்சி தென்படும், வீட்டில் சுபகாரியமொன்று இடம்பெறலாம்.

மகரம்: உறவாடிக் கெடுப்பதற்கு பகையாளிகள் வருவர். எற்சாகம் குன்றும் பிரயாணத்தின்போது பொருள்தவறக் கூடும், சிலருக்கு உஷ்ணரோகம் சம்பந்தமான நோய் ஏற்படலாம்.

கும்பம்: குடும்பத்தில் குதூகல நிகழ்ச்சிகள் இடம்பெறும், வெளியிடத்திலிருந்து மகிழ்ச்சியான செய்தி ஒன்று கிடைக்கும், பணவரவுக்கும் இடமுண்டு, உடல்நலத்திலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றமுண்டு.

மீனம்: செய்தொழிலில் தளர்ச்சி ஏற்படும், சதிசெய்வதற்கு சகாக்கள் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து கொண்டிருப்பர் பிரயாணத்தைத் தவிர்க்கவும், இன்று இறைநம்பிக்கை நன்று.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# யாழ். மாவட்டபாடசாலை கட்டுரைபோட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

திட்ட அமுலாக்கல் அமைச்சின் சனத்தொகைப் பிரிவின் கீழ் இயங்கும் யாழ் மாவட்ட சனத்தொகைக்குழு, 'துரித சனத்தொகை வளர்ச்சியில் ஏற்படும் விளைவுகள்' பற்றிய கட்டுரைப்போட்டியொன்றை நடாத்தியது,

இக்கட்டுரைப் போட்டியில் யாழ் மாவட்டத்திலுள்ள பெரும்பாலான பாடசாலைகளிலிருந்து 5000 மாணவர்களுக்கு மேல் பங்குபற்றினர்கள்

க.பொ த ச.உயர்தரம் என இரு பிரிவாக இப்போட்டி நடைபெற்றது.

க. பொ, த. உயர்தரம் பிரிவில் பரிசுபெற்றோர் விபரம்
1வது பரிசு: செல்வி கே. கலாநிதி [வேலணை ம ம. வி.]
2வது பரிசு: செல்வன் எம். தவயோகநாதன் [நயினாதீவு ம.ம வி !
3வது பரிசு: செல்வி ஏ ஆனந்த கௌரி [வேலணை ம ம.வி].

க பொ. த. சாதாரணம் பிரிவில் பரிசு பெற்றோர் விபரம்:
1ம் பரிசு: செல்வி என். யோகராணி [காங்கேசன் துறை நடேஸ்வராக்கல்லூரி]
2வது பரிசு: செல்வி கே. ஜெயபவானி [யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம்]
3வது பரிசு: செல்வன் கே. ஜெயக்குமார் [கிளிநொச்சி ம. ம. வி].

இவர்களுக்கான பரிசாக, யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில்வைத்து யாழ் அரசாங்க அதிபரும் யாழ்.மாவட்டச் செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா பெறுமதியான பண உறுதி சீட்டுகளை வழங்கினர்.

இப்பரிசளிப்பு விழா திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் திரு. எஸ். சிவதாசன் தலைமையில் நடைபெற்றது.

இப்போட்டியில் கலந்து கொண்ட சகல பாடசாலை மாணவர்களுக்கும் திட்டமிடல் அதிகாரி திரு. எஸ். புவனேந்திரன் பாராட்டுத் தெரிவித்தார்

இவ்விழாவில் குடும்பக்கட்டுப்பாடு சம்பந்தமான நாடகம் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (மா)

## அன்பளிப்பு

[சுழிபுரம்]

மலேசியாவிலிருந்து தாயகம் வருகை தந்த திருமதி பூமாதேவி பரமசோதி தாம் கல்வி கற்ற பாடசாலையான பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்திற்கு இரண்டாயிரம் ரூபாவை வழங்கியுள்ளார் இப்பணம் பாடசாலை அபிவிருத்திச் சங்க வங்கிக் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது.

## புதிய ஜே. பி.

கொழும்பு]

சண்டிலிப்பாய் கிராமோதய சபைத்தலைவர் திரு. ம பொ. செல்வரத்தினம் யாழ்ப்பாணப் பகுதிக்கான சமாதான நீதவானாக நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார். சண்டிலிப்பாய் கிராம அபிவிருத்திச்சங்கம் இந்துவிருத்திச்சங்கம் ஆகியவற்றின் தலைவரும் சண்டிலிப்பாய் முருகமூர்த்தி கோவில் தர்மகர்த்தா சபை உறுப்பினருமான திரு செல்வரத்தினம் சமூக சேவைகளில் தீவிரஈடுபாடுகொண்டுள்ளவர்

## இலங்கை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மகளிர் பேரவையைச் சேர்ந்த திருமதி சுகிர்தலட்சுமி, வண பிதா ஜெயக்குமார் ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினர்கள்.

## மகளிர் மன்றம் முதியோர்க்கு உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ மகளிர் மன்றத்தின் ஆதரவில் கடந்த 31ம்திகதி வதிரி ஸ்ரீபரமானந்த முதியோர் இல்லத்தில் முதியோர்தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மேற்படி மன்றத்தைச் சேர்ந்த 25 உறுப்பினர்கள் மன்ற தலைவர் திருமதி கருணானந்தன் தலைமையில் அன்றையதினம் அவ்வில்லத்திற்குச் சென்று அங்குள்ள முதியோருக்கு உணவு. மற்றும் உதவிகளை வழங்கினார்கள். மன்றத்தின் ஏற்பாட்டின்மீது டாக்டர் சண்முகலிங்கம், டாக்டர் யோகநாதன் ஆகியோர் சிகிச்சை முகாம் ஒன்றையும் நடத்தினர்கள். (மெ)

# "முதியோர்களுக்கு தொழில் வாய்ப்பைஏற்படுத்தவேண்டும்"

[மாவிட்டபுரம்]

''முதியோர்களைச் சமுதாயத்திலிருந்து புறக்கணித்து வைக்காமல் அவர்களையும் பேணிப்பாதுகாப்பது நமது கடமை. கிராமங்கள்தோறும் முதியோருக்கான ஆதரவு இல்லங்களை அமைப்பதில் பொது நோக்குடன் செயல்படும் நிறுவனங்கள் முன்வரவேண்டும். இந்த இல்லங்களில் சிறுகைத் தொழில்களையும் ஆரம்பித்து முதியோருக்குச் சிறுசிறு தொழில்களிலும் ஈடுபாடு கொள்ளச்செய்ய வேண்டும்''.

இவ்வாறு பழை-வீமன்காமம் கிராமோதய சபையின் ஆதரவில் முதியோர் தினவிழா சபையின் பணிமனையில்நடந்த சமயம் அதில் கலந்து பேசிய யாழ் மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் திரு. க. இராமநாதன் கூறினர்.

ஆசிரியர் திரு. க. செல்லத்துரை தலைமை வகித்தார்.

எமது சபைப்பகுதியில் வசதி உள்ளவர்கள் அளித்த உதவியினால் இவ்விழாவைச் சிறப்பாக நடாத்துவதாகத் தலைவர் தமது உரையில் கூறினர்

வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபரி திரு. க. மகாதேவா பேசுகையில் கூறியதாவது;-

''முதியோர்கள் சமுதாயத்திற்கு அத்தியாவசியமானவர்கள் தவறான வழியில் செல்லும் இளஞ்சந்ததியினருக்கு நல்ல புத்திமதிகளைக்கூறி நல்ல வழியில் செல்ல வழிவகுப்பவர்கள் முதியோர்களே என்றார்.

வலி-வடக்கு பிரதேச சபைத் தலைவர் திரு எஸ் சிவமகாராஜா, வீமன்காமம் மகாவித்தியாலய அதிபர் திருமதி வி. பி சச்சிதானந்தம் ஆகியோரும் பேசினர்.

பழை வீமன்காமம் பகுதியைச் சேர்ந்த சுமார் 50 முதியோருக்கு மேற்படி விழாவில் உணவுப்பொருட்கள், உடை என்பன வழங்கப்பட்டன.

மகாவலி அபிவிருத்திச்சபை பிரதி பொது முகாமையாளர் திரு சி. குமாரபாதியும், அவரது பாரியாரும் இவ்விழாவில் பிரதம அதிதிகளாகக் கலந்து இப்பொருட்களை முதியவர்களுக்கு வழங்கினர்.

கலைநிகழ்ச்சிகளும் நடந்தன, பழை - வீமன்காமம் விசேட சேவை அலுவலர் திரு. வே வன்னியசிங்கம் நன்றி கூறினர்.

## அனுதாபம்

(சுண்டிக்குளி)

அமரத்துவமடைந்த விளையாட்டு வீரரும் சமூகசேவையாளருமான உரும்பிராயைச் சேர்ந்த நக்கீரனுக்கு உரும்பிராய் கிராமோதயசபை அனுதாபம் தெரிவித்துள்ளது.

கிராமோதய சபைத் தலைவர் ந. அரியரத்தினம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த அனுதாபத் தீர்மானம் தலைவரினால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இக்கூட்டத்தில் உரும்பராய்கிராமத்துக்கு ஒரு இணைக்கசபையும் அமைக்கப்பட்டது இதன் தலைவராக திரு செ ஐயாத்துரையும், செயலாளராக ஆசிரியர் வை கதிரவேலன் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## நாதஸ்வர வித்துவான் பணி

(சுழிபுரம்)

வழக்கம்பரை சூழலில் தினமும் அதிகாலை திருமுறை, திருப்புகழ் ஆகிய பண்ணிசைகள் நாதஸ்வரத்தில் வாசித்து நூற்றுக் கணக்கானவர்களை பூசை வழிபாட்டில் நாதஸ்வர வித்துவான் என். நடராசா பாகவதர் ஈடுபடச் செய்து வருகிறார் அதிகாலை நாலரை மணியளவில் வழக்கம்பரை அம்மனுக்கு காலைப்பூசை சிறப்பாக நடைபெற்று வருகின்றது. சென்ற பத்து வருடங்களுக்கு மேலாக வந்தாறுமூலையில் இருந்து வந்து தமது நேர்த்தி உபயமாக என் நடராசா பாகவதர் இப்பணியைச் செய்து வருகின்றார். இவரது திருப்புகழ் வாசிப்பு சென்ற வாரம் வட்டுக்கோட்டைக்கு வருகை தந்த திருமுருக கிருபானந்தவாரியாரை கவர்ந்து கொண்டதுடன் பாராட்டப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.


வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

லிடோ [யாழ்.நகர்]
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-ஜெயலலிதா
சவாலேசமாளி

கடைசி வாரம்
ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 4-30, 7-00, 9-30
BRUCE LEE in
THE WAY OF THE DRAGON
த வே ஒவ் த ட்றகன்

ராணி தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
(யாழ். நகர்) சிவாஜி-உஷா நந்தினி நடித்த
என்னைப்போல் ஒருவன்

வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்நகர்)
காலை 10-00 மணி முதல் பிற்பகல் 1-00 மணிவரை ஆசனங்கள் முன்கூட்டியே பதிவுசெய்யலாம்.
காதல் என்பது தெய்வீகமானது. இந்த தெய்வீகத்தின் ஆலயமாக விளங்கும் வசந்த மாளிகையை இன்றே பாருங்கள். ரசிகப்பெருமக்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி.
சிவாஜி வாணிஸ்ரீ
பாலாஜி, நாகேஷ்
நடித்த
"வசந்தமாளிகை"

துன்னாலையில் நடந்த பரிதாபச் சாவுகள்:

# பணத்தகராறு தந்தை, மகள் வாழ்வை முடித்தது!

(புலோலி)

பணம் சம்பந்தமாகத் தந்தைக்கும் மகளுக்குமிடையே ஏற்பட்ட தகராறு இருவரின் உயிரையும் குடித்த பரிதாபகரமான சம்பவமொன்று பருத்தித்துறைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த துன்னாலையில் நடைபெற்றுள்ளது.

துன்னாலை வடக்கு வெலிகந்தோட்டத்தைச் சேர்ந்த தம்பையா தாமோதரம் [வயது 65] அவரது மகள் தாமோதரம் சேதுப்பிள்ளை [வயது 25] ஆகிய இருவருமே இப் பரிதாபகர மரணத்திற்கு ஆளாகியவர்களாவர். இவ்விருவரது மரணங்கள் சம்பந்தமான விசாரணைகளையும் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். வயிரமுத்து மேற்கொண்டார். பருத்தித்துறைப் பொலிஸ் கான்ஸ்டபிள் எஸ். சிவராசா சாட்சியை ஆஜர் செய்தார்.

விசாரணையின் போது இறந்த தாமோதரத்தின் மனைவியும், இறந்த சேதுப்பிள்ளையின் தாயுமான மங்கையற்கரசி சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டதாவது;

இறந்தவர் என் கணவனும் மகளுமாவர். இறந்த எனது கணவருக்கு அரசாங்கத்தின் வீடமைப்புத்திட்டத்தின் கீழ் அண்மையில் 1000 ரூபா கிடைத்திருந்தது. எனது கணவருக்கு மது அருந்தும் பழக்கமுடையவர். எனவே அவர் மது அருந்தி பணத்தை செலவு செய்து விடுவார் என்ற காரணத்தினால் இறந்த மகள் அத்தொகையைத் தரும்படி தகப்பனிடம் கேட்டார். ஆனால் அவர் அப்பணத்தை கொடுக்க மறுத்துவிட்டார். இதனால் இருவரும் வாக்குவாதப்பட்டனர்.

பின்னர் எனது கணவர் எங்கோ போய்விட்டுவந்தார். நான் குசினிக்குள் இருந்தபோது கையில் வைத்திருந்த மருந்துப்போத்தலிலிருந்து வாயில் மருந்தை விட்டார். மகள் ஓடிச்சென்று அவரைக் கட்டிப்பிடித்து மருந்து போத்தலைப் பறித்தார். அவர் கீழே விழுந்துவிட்டார். மகள் ஓடிவந்து அம்மருந்துப் போத்தலை பறித்துத்தான் குடித்தார். கணவர் இறந்துவிட்டார். மகளை உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றோம். அங்கு அவரும் இறந்துவிட்டார்.

பலரின் சாட்சியங்களை எடுத்து மரணவிசாரணை அதிகாரி இருவரினதும் மரணங்களும் தற்கொலைகள் எனத் தீர்ப்பளித்தார்.

## பனம்பொருள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விருத்தி சர்வதேச மகாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

பனை அபிவிருத்தி சம்பந்தமான பல்வேறு ஆராய்ச்சிகள் பற்றியும், ஆய்வுத் திட்டங்கள் பற்றியும் கலந்துரையாடி பனம் பொருள் அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல் பற்றியும் இம்மகாநாட்டில் ஆராயப்படுமென பனம் பொருள் அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. க. நடராசா தெரிவித்தார்.

(புலோலி – நிரு)

ST. JOHN'S COLLEGE, JAFFNA

Wanted for Immediate Employment a Graduate to Teach Botany In the Advanced Level Classes

Please Call over at the College Office with Certificates Relating to Character, Ability and Educational Qualifications on Tuesday 11th January 1983 at 10 A M.

PRINCIPAL

5719

## பிரபாகரன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் அதிபர் திரு ஈ. ஆனந்தராசா விசேட பொலிஸ் குழுவொன்றை நியமித்தார்.

இந்த விசேட குழு நேற்று நடத்திய விசாரணையைத் தொடர்ந்து மேலும் இரு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

கொள்ளைக்கு பாவிக்கப்பட்ட துப்பாக்கியை 1200 ரூபாவிற்கு 3 தோட்டாக்களுடன் வாங்கியதாகவும் மந்துவில் குளத்தடியில் சுடப்பழகிய போது ஒரு தோட்டா வெடித்துவிட்டதாகவும், 2 தோட்டாக்களுடனேயே எரிபொருள் நிலையத்திற்குச் சென்றதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

பிரபாகரன் கோஷ்டிக்கும். உமாமகேஸ்வரன் கோஷ்டிக்குமிடையில் ஏற்பட்ட பிளவை தொடர்ந்து தமிழ் ஈழ லட்சியத்திற்காகவும் தமிழ் ஈழம் அமைப்பதற்காகவும், தங்கள் புதிய குழுவாக இயங்கிவருவதாகவும் இளைஞர்கள் விசாரணையின் தெரிவித்ததாகவும் அறியப்படுகிறது.

பொலிசார் தொடர்ந்து விசாரணை செய்துவருகின்றனர் மேலும் 3 சந்தேக நபர்களை பொலிசார் தேடிவருகின்றனர். [மா]

## சீமெந்து...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ்கோஷ்டி ஒன்றை நியமித்திருந்தார்.

இப்பொலிஸ் கோஷ்டியினர் விசாரணை மேற்கொண்டபோது சந்தேகத்தின் பேரில் ஏழுபேரைகைது செய்தனர், கைது செய்யப்பட்டவர்களில் இருவர் சிரவியிலுள்ள ஆசிரியர் ஒருவரின் வீட்டில் நடைபெற்ற கொள்ளைச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்களெனவும் தெரியவந்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற மேலும் பல கொள்ளைச் சம்பவங்களின் மர்மங்கள் துலங்குமென பொலிசார் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (மா)

## முதலாம்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தினம் (பாவற்குளம்) செ. சற்குணராசா (இளவாலை) த. சிவலிங்கம் (மாங்கொல்லை) த. பா. விஜயகுமார் (மாங்கொல்லை) க. சுந்தரலிங்கம் (வட்டுக்கோட்டை) பொ. அறிவழகன் [உருத்திரபுரம்] மா. சிவகுருநாதன் (மாங்கொல்லை) ஆகியோர் ஆஜர் செய்யப்பட்டனர்.

1ம் சந்தேக நபர் சி. குணரத்தினம் குற்றத்தை ஒப்புக் கொண்டார். இதைத் தொடர்ந்து நீதவான் 1ம் சந்தேக நபரை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டு மற்றும் 6 சந்தேக நபர்களையும் விடுதலை செய்தார். [க]

## திருடப்பட்ட...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மூன்றும் கட்டை பிரிவிலிருந்து இக்கம்பிகள் திருடப்பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

திருடப்பட்ட மோட்டார் யந்திரத்தை ஜேர்மனியிலிருந்து கொண்டுவரப்பட்டதெனக்கூறி வட்டுக்கோட்டையில் 3000 ரூபாவிற்கு விற்பனை செய்ததாகவும் விசாரணையில் தெரியவந்தது.

பொலிசார் சாவகச்சேரி இளவாலை வட்டுக்கோட்டைப் பகுதியில் விசாரணை செய்த பின் திருடப்பட்ட மோட்டார் யந்திரத்தை மீட்டுள்ளனர். (க)

# தந்திக்கம்பி திருடர்கள் வகையாகச் சிக்கினர்!

(யாழ்ப்பாணம்)

தந்திக் கம்பத்திலிருந்து கொண்டு தந்திக் கம்பிகளை அறுத்துக்கொண்டிருந்த ஒருவரையும், தந்திக கம்பத்தின் அருகில் நின்ற ஒருவரையும் பொதுமக்கள் மடக்கிப் பிடித்துப் பொலிசில் ஒப்படைத்துள்ளனர்

யாழ் பிரப்பங்குளம் வீதியில் நேற்று முன்தினமிரவு இத்தந்திக் கம்பித் திருட்டுச் சம்பவம் நடைபெற்றது.

இருவரையும் பிடித்துப் பொலிசில் ஒப்படைத்தபொது மக்களை யாழ். பொலிஸ் அதிபர் ஏ. ஈ. ஆனந்தராசா பாராட்டியதுடன், நற்சான்றிதழ்களும் வழங்கியுள்ளார். இவர்களுக்கு சன்மானம் வழங்குவதற்கும், பொலிஸ்மா அதிபரின் உதவியைக் கோரியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக பொம்மைவெளியைச் சேர்ந்த எம் மன்சூர், சாகுல் ஹமீட் ஆகியோரே சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டவராவர்.

## யாருடையது?

கந்தர் மடத்தைச் சேர்ந்த செல்வன் ப ரவீந்திரன் என்பவர் யாழ். இலங்கை வங்கிக்கு முன்பாக ஓர் அடையாள அட்டையை கண்டெடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பொற்றுக் கொள்ளலாம்.

## வடபிராந்திய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். குற்றத்தடுப்பு இன்ஸ்பெக்டர் என் கிருஷ்ணதாசன் சாவச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு பொலிஸ்நிலைய இன்ஸ்பெக்டர் எஸ் பி இராசலிங்கம் கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகவும், யாழ்.பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர் எம் கமலேஸ்வரன் முல்லைத்தீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகவும், ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலைய சப்இன்ஸ்பெக்டர் மாங்குளத்துக்கும், மன்னார் பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர் என். யோகுகுமார் மட்டக்களப்புக்கும், காங்கேசன்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பீ இராமநாதன் நாராஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்துக்கும் இடமாற்றம் பெற்றுள்ளனர். [மா]

## வவனியாவில் துப்பாக்கி கொள்ளை!

(வவனியா)

துப்பாக்கியால் ஆாயத்தில் சுட்டுப் பயமுறுத்தித் துப்பாக்கியைப் பறித்துச்சென்ற சம்பவம் நெடுங்கேணி வண்ணான்குளத்தில் நடைபெற்றுள்ளது.

இரு இளைஞர்கள், வண்ணான்குளத்திலுள்ள சிலம்பு என்பவருடைய தோட்டத்துக்குள் புகுந்து சிறிது நேரம் அட்டகாசம் நடாத்திவிட்டு, துவக்கோடு சென்றுவிட்டனர்

சிலம்பு என்பவரும், அவரது மகனும் தோட்டத்தில் இருந்தனர். சிலம்பு என்பவர் வெளியே சென்ற சமயம், இரு இளைஞர்கள் துப்பாக்கியோடு வந்தனராம் மகனைப் பயமுறுத்தி துப்பாக்கியைப் பறித்துச்சென்றுர்களாம்

வவனியா பொலிஸில் செய்யப்பட்ட புகார் குறித்து புலன் விசாரணை நடக்கிறது.

## சிரமதானம்

(மன்னார்)

மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலையில் 500 யார் நீளமான வேலி சிரமதான மூலம் போடப்பட்டது

மன்னார் பட்டினம் கிழக்கு கிராமோதய சபை தலைவர் ஜனாப் இக்பால் தலைமையில் நடைபெற்ற இச்சிரமதானப்பணியில் பாடசாலை மாணவர்கள் ஈடுபட்டனர்.

## மரண அறிவித்தல்

திருமதி விசாலாட்சி வரதராஜா

திருமதி விசாலாட்சி வரதராஜா காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற டாக்டர் பெ. வரதராஜாவின் அன்பு மனைவியும், லீலாவதி, சரோஜினி (ஆசிரியை கதீட்ரல் கல்லூரி கொட்டாஞ்சேனை), டாக்டர் ஸ்ரீகாந்தா [U K.], ஸ்ரீதரன், சத்தியபாமா, ஸ்ரீரங்கன் சட்டத்தரணி, யாழ்ப்பாணம்] ஆகியோரின் அன்புத் தாயாரும், மகாலட்சுமியின் அன்பு மாமியாரும் ஆவார் அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று [4-1-83] செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு வட்டுக்கோட்டையிலுள்ள பாமா பவனம் இல்லத்தில் நடைபெறும். 5725

## மரண அறிவித்தல்

எம். சூசைப்பிள்ளை (ஜே. பீ)

சங்கானை விக்னேஸ்வரா வித்தியாலய ஆசிரியரும், சமாதான நீதிபதியும், நீர் நிலயம் கணிப்பாளருமான, இளவாலை மேற்கைச் சேர்ந்த எம். சூசைப்பிள்ளை நேற்றுக் காலை காலமானார். இவர் திரேசம்மாவின் அன்புக் கணவரும், செபஸ்தியான், நிமால் [டோகா], மேரிமலின், ஜேரூஸ் உதயகுமார், தோமஸ் செல்வமார், லிக் மோகசுமார், ஆன்பிபியானு ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார் அன்னாரது சேம நல்லடக்கம் இன்று 04-01-83] செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு புனித அன்னம்மா சேமக்காலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

சென்ற்யூட்லேன், இளவாலை

குடும்பத்தினர்

5724

## வாகனம் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ளதும்; ஒரே பாவிப்பிலுள்ளதுமான "ஈ. எல். எப்." வான் விற்பனைக்குண்டு.

விலை விபரங்களை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

22 ஸ்ரீ 8642 இசுசு - E.L.F. வான்

மகாராஜா இன்வெஸ்ட்மென்ட் லிமிட்.

122, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 24267

யாழ்ப்பாணம் "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 68-ம் இலக்க அலுவலகத்தில் 1983-ம் ஆண்டு ஜனவரி மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number Q B. 100236/81 Eelanaadu - P. O. Box 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.